# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன்: 9003009752
மின்னஞ்சல்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே…

அதி சீக்கிரமாக வரப்போகிற நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது அன்பின் வாழ்த்துக்கள். நம்முடைய தேவன் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது. இன்றைக்கு நாம் உயிரோடு இருப்பது அவருடைய தூய கிருபை என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு மனிதன்மேல் தேவ கிருபை இருந்தால் போதும் எல்லாமே ஜெயமாக முடியும்.

கீழே உள்ள வசனத்தைக் கவனித்துப்பாருங்கள்.

**அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான் (லூக்கா 1:28).**
**தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய் (லூக்கா 1:30).**

இதை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு மகளே, உங்களுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்துள்ளது. உங்கள் கருவில் வளர்ந்துகொண்டிருக்கும் உங்கள் குழந்தை தெவனிடம் இருந்து கிருபையைப் பெற்றுள்ளது. அந்தக் கிருபை உங்கள் குழந்தையையும் உங்களையும் ஏந்தி தாங்கி சுமந்து எல்லாத் தீமைக்கும் தப்புவிக்கும். நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எந்த வாதையும் உங்கள் கூடாரத்தை அணுகாது. எந்த தீங்கும் உங்களை அணுகாது. ஏனென்றால் அவருடைய தூய கிருபை உங்களை சூழ்ந்து உள்ளது. அந்த அவருடைய கிருபையை நினைத்து நன்றியுடன் அவரைத் துதியுங்கள்.

என் அன்பு மகளே, உங்களுக்காக நான் இப்போது ஜெபிக்கப்போகிறேன். என்னோடு இணைந்து நீங்களும் ஜெபியுங்கள். கர்த்தர் இப்போது நமது வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கப்போகிறார். அதற்கு அவர் பதில் கொடுக்கப்போகிறார்.

மகா பரிசுத்தமும் கிருபையும் உள்ள எங்கள் அன்பின் பரலோக பிதாவே, உம்முடைய கிருபை ஜீவனைப் பார்க்கிலும் நல்லது. அந்த நல்ல கிருபையை நினைத்து நன்றியுடன் உம்மை துதிக்கிறேன் சுவாமி. உம்முடைய அந்த நல்ல கிருபை இப்போது என் அன்பு மகளையும் அவர்களின் அன்பு குழந்தையையும் நிறப்புவதாக. மூடிக்கொள்வதாக, சூழ்ந்துகொள்வதாக, பாதுகாத்துக்கொள்வதாக. எத்தீங்கும் இவர்களை அணுகாமல் உமது கண்ணின் மணிபோல இவர்களை பாதுகாத்துக்கொள்ளும். கருவில் வளர்ந்துவரும் குழந்தை உமது கிருபையால் வளர்ந்துசெழிக்கட்டும். எல்லா உறுப்புகளும் பாதுகாக்கப்படட்டும். ஏற்ற நாளில் சுகப் பிரசவத்தைக் கொடுத்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம் எங்கள் பரிசுத்தமுள்ள கிருபையுள்ள நல்ல பிதாவே. ஆமென்.

என் அன்பு மகளே, கவலைப்படாதிருங்கள் கர்த்தர் நிச்சயமாக உங்களையும் உங்கள் கர்ப்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. நீங்கள் தேவனால் மறக்கப்படுவதில்லை கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாக இருங்கள். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக. மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

S. Selvaraj

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*